இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 24-06-2025

# மீண்டும் எழுந்தது கோட்டம்!

திருவள்ளுவரையும் தி.மு.க.காரராக நினைத்து வள்ளுவர் கோட்டத்தை பாழ்படுத்தி வைத்திருந்தது கடந்த கால அ.தி.மு.க. அரசு. 'வான்புகழ் கொண்ட வள்ளுவர் தான் ஈராயிரமாண்டு தமிழ்நிலத்தின் அறிவின் எழுச்சி' என்பதை உணர்த்தும் வகையில் மீண்டும் வள்ளுவர் கோட்டத்தை புதுப்பித்து இருக்கிறார் திராவிட நாயகன் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**தமிழ்நாடு சட்டமன்றத்தில் குறளாசான் திருவள்ளுவர் படம் இடம்பெற்றுள்ளது. இதனை வைக்கக் காரணமாக இருந்தவர் கலைஞர் அவர்கள். ஓவியர் வேணுகோபால் சர்மா தீட்டிய அந்தப் படத்தை, தமிழ்நாடு சட்டமன்றத்தில் வைக்க நினைக்கிறார் கலைஞர். அது பக்தவத்சலம் ஆட்சி. 'திருவள்ளுவர் படத்தை மன்றத்தில் வைக்க கனம் முதலமைச்சர் அனுமதிக்க வேண்டும்' என்றார் கலைஞர். 'கனம் உறுப்பினர் தனது சொந்த செலவில் கொடுத்தால் வைக்கலாம்' என்றார் முதல்வர். 'நானே தயாரித்துத் தருகிறேன்' என்றார் கலைஞர். மறுநாள் காட்சிகள் மாறியது. 'அரசே வைக்கும்' என்றார் முதல்வர். 'யார் வைத்தால் என்ன? வள்ளுவர் உள்ளே வர வேண்டும்' என்றார் கலைஞர்.**

பொதுப்பணித் துறையோடு சேர்த்து போக்குவரத்துக்கும் அமைச்சராக ஆனார் கலைஞர். தமிழகத்தில் ஓடும் பேருந்துகளில் திருவள்ளுவர் படத்தையும், குறளையும் எழுதி வைக்க உத்தரவிட்டார். சென்னை மயிலாப்பூரில் இருக்கும் திருவள்ளுவர் கோவிலைச் சீரமைத்தார் முதலமைச்சர் கலைஞர்.

மயிலை திருவள்ளுவர் கோவிலை விரிவுபடுத்த முடியாத வருத்தத்தில் விரிவான இடம் பார்த்து அவர் கண்டுபிடித்ததுதான் நுங்கம்பாக்கம். 15 ஏக்கர் நிலத்தை ஒதுக்கி எழுப்பினார் கோட்டம். 500 சிற்பிகள், 1000 ஊழியர்கள் இரவு பகல் பாராது 14 மாதங்களில் எழுப்பிய மாபெரும் கோட்டம் அது. 1974-75 ஆம் ஆண்டில் மொத்தச் செலவு 50 இலட்சம். 101 அடி உயரமுள்ள தேர் செய்து, அதில் கொண்டு போய் வள்ளுவரை உட்கார வைத்தார்.

**'சேர,சோழ,பாண்டியர் மூவேந்தர் மூளையில் உதிக்காத சிந்தனை இது' என்று சொன்னவர் கவிஞர் சுரதா. 1976 சனவரி 23 ஆம் நாள் கட்டுமானப்பணி மொத்தமும் முடிந்தது. பிப்ரவரியில் திறப்புவிழா. சனவரி 30 கழக ஆட்சி கலைக்கப்பட்டது. 10 யானைகள், 133 குதிரைகள், 1330 தமிழாசிரியர்கள், தமிழ்ப்பேராசிரியர்கள் நடந்து வர ஊர் வலம் நடத்த திட்டமிட்டிருந்தார் கலைஞர் . சர்வாதிகாரம் அனைத்தையும் வீழ்த்தியது. கலைஞர் இல்லாமல் திறப்புவிழா நடந்தது. மொத்தமே ஐந்து நிமிடங்கள். பேசிய இரண்டு பேரும் ஆங்கிலத்தில் பேசினார்கள். கலைஞர் வைத்த அடிக்கல்நாட்டு கல்வெட்டும் வெளியில் வீசப்பட்டது. 'கல்லணை கட்டிய கரிகாலன் கல்வெட்டு வைக்கவில்லை. ஆனால் கல்லணை கட்டியவன் என்றால் கரிகாலனை தான் சொல்கிறது' என்று அன்று எழுதினார் கலைஞர்!**

"கோட்டம் தீட்டப்படுகிறது, குறளோவியம் தீட்டப்படுகிறது" என்ற தலைப்பில் 'முரசொலி'யில் (15.4.1976) ஒரு கடிதம் எழுதினார் தலைவர் கலைஞர். அது கடிதமல்ல காவியம். 'முரசொலி' நாளிதழில் இரண்டரைப் பக்கத்துக்கு அது வெளியானது.

"கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளுங் களிப்பாய் - காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணாய் - வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமாய் - மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதி கொடுக்கும் மதியாய் - நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவாய் - எல்லார்க்கும் பொதுவில் நடமிடுகின்ற ஏற்றமிகு குறளுக்கு ஓவியம் தீட்டப்படுகிறது. அந்தக் குறளோவியக் கோட்டம் திறக்கப்படுகிறது" என்று எழுதினார் கலைஞர்.

**கோட்டம் அமைந்தது என்றால் அதற்கு நிதி ஒதுக்கியவர் மட்டுமல்ல கலைஞர். தனது மதியையும் ஒதுக்கியவர் அவர் தான். பூம்புகார் கலைக் கோட்டம் அமைத்துக் கொண்டிருந்த சிற்பி கணபதி ஸ்தபதியிடம் கோட்டம் அமைக்கும் பொறுப்பை ஒப்படைத்த கலைஞர் அவர்கள், கோட்டம் எப்படி அமைந்திட வேண்டும் என்றும், வள்ளுவர் சிலை எந்த இடத்தில் அமைந்திட வேண்டும் என்றும் கோட்டுச் சித்திரங்களை தானே வரைந்து கொடுத்தார். அதனால் தான் கலைஞரை 'பூம்புகார் பெருந்தச்சன்' என்று பாராட்டினார் கணபதி ஸ்தபதி. "இப்படி ஒரு கல் தேரை உருவாக்க சமீப காலத்தில் யாரும் சொன்னது இல்லை" என்று சிற்பி எஸ்.கே.ஆச்சார் சொன்னார். (இவரும் கோட்டம் கட்ட கணபதி ஸ்தபதியுடன் இருந்தவர். இவர் தான் குமரி விவேகானந்தர் கோட்டம் அமைத்தவர்)**

"நெடுநாள் ஆசை நிறைவேற்றம்

நெஞ்சில் இன்பக் கொடியேற்றம்" - என்று எழுதினார் கலைஞர் அன்று!

அதே மனநிலையை மீண்டும் உருவாக்கிவிட்டார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று!

ரூ.80 கோடி மதிப்பீட்டில் தலைநகர் சென்னையில் தமிழ்க் கோட்டம் மீண்டு(ம்) எழுந்துள்ளது. 133 அடியில் குமரி முனையில் வள்ளுவனார் சிலை எழுப்பினார் கலைஞர். அதன் 25 ஆவது ஆண்டு வெள்ளிவிழாவை இந்த ஆண்டின் தொடக்கத்தில் கொண்டாடினார் முதலமைச்சர். இதோ, அடுத்ததாக சென்னை வள்ளுவர் கோட்டத்தையும் புதுப்பித்துக் கொடுத்திருக்கிறார் முதலமைச்சர் அவர்கள்.

**தமிழ் - தமிழன் - திராவிடம் - திருக்குறள் - சமூகநீதி எல்லாம் கலைஞரோடு போய்விடும் என்று நினைத்தவர் எண்ணத்தில் மண் விழ, மலையென அதனை எழுப்பிக் கொண்டிருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (22.6.2025) முகாம் அலுவலகத்தில், தி.மு.கழக வெளியீட்டு செயலாளர் திருச்சி செல்வேந்திரன் அவர்கள் சந்தித்து, நக்கீரன் இதழின் வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்றதையொட்டி வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, அவரது மகன் கழக கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில துணைச் செயலாளர் எழில்மாறன் செல்வேந்திரன் மற்றும் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

### இந்தியாவிலேயே முதன்முறையாக வேறு எந்த மாநிலங்களிலும் இல்லாத வகையில்

## சென்னையில் ரூ.487.66 கோடியில் குழந்தைகளுக்கான பிரத்யேக உயர்சிறப்பு மருத்துவமனை கட்டிடம்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, ஜூன் 24–

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (22.6.2025) சென்னை, கிண்டியில் உள்ள கிங் இன்ஸ்டிட்யூட் வளாகத்தில் ரூ.487.66 கோடி மதிப்பீட்டில் புதியதாக குழந்தைகளுக்கு என்று பிரத்யேக உயர்பன்னோக்கு மருத்துவமனை இடம் தேர்வு மற்றும் கட்டுமானப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:–

**கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை**

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்த அரசு பொறுப்பேற்றநாள் முதல் தற்போது வரை பல்வேறு மருத்துவக் கட்டமைப்புகளை தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற முதல் ஆண்டிலேயே சைதாப்பேட்டையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரால் கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை அமையும் என்று அறிவித்தார்கள். அதனடிப்படையில் இன்றைக்கு ஏறத்தாழ ரூ.450 கோடிக்கு மேலாக செலவு செய்யப்பட்டு கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை அமையப் பெற்றுள்ளது. அறிவிக்கப்பட்ட 18 மாதங்களிலேயே அப்பணி முடித்து மக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது. இந்தியாவில் உள்ள 36 மாநில அரசு மருத்துவமனைகளில் வேறு எங்கும் இல்லாத அதநவீன வசதிகள் அம்மருத்துவமனையில் அமைந்துள்ளது. குறிப்பாக double balloon endoscopy, Auto MRI போன்ற அதிநவீன மருத்துவ உபகரணங்கள் உள்ளடங்கிய மருத்துவமனையாக விளங்கி வருகிறது. தினந்தோறும் இம்மருத்துவமனையில் 2000த்திற்கும் மேற்பட்ட புறநோயாளிகள் மருத்துவ சேவையை பெற்று பயன்பெற்று வருகின்றனர்.

அதேவளாகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது ஒன்றிய அரசோடு இணைந்து தேசிய முதியோர் நல மருத்துவமனை தொடங்க நிலம் தந்து அதற்கான பணிகள் தொடங்கப்பட்டது. 10 ஆண்டு காலம் அப்பணி கிடப்பில் போடப்பட்டு நமது முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றபிறகு அம்மருத்துவமனையின் கட்டமைப்புகளை



மேம்படுத்தி கடந்த ஆண்டு அம்மருத்துவமனை திறந்து வைக்கப்பட்டது. அந்த மருத்துவமனை அறிவித்தது இந்தியாவில் 2 இடங்களில். அதில் ஒன்று டெல்லியில் எய்ம்ஸ் மருத்துவமனை வளாகத்திலும், இன்னொன்று கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை வளாகத்திலும் அமைந்துள்ளது. அம்மருத்துவமனையில் தமிழ்நாட்டில் இருந்து ஆயிரக்கணக்கான முதியோர்கள் சிகிச்சை பெற்று பயன்பெறுகின்றனர்.

**குழந்தைகளுக்கான பிரத்யேக அரசு உயர்சிறப்பு மருத்துவமனை**

இன்னொரு கூடுதல் சிறப்பாக இந்தியாவில் உள்ள மருத்துவக் கட்டமைப்புகளை உதாரணமாக காட்டுவதைக் காட்டிலும் உலகளவில் குழந்தைகளுக்கான உயர்சிறப்பு மருத்துவமனை வேறு எந்த மாநிலத்திலும் இல்லை என்கின்ற வகையில் உலகளவில் ஒரு மிகப் பெரிய மருத்துவக் கட்டமைப்புகளோடு போட்டி போடுகின்ற மருத்துவமனை இங்கே அமையவிருக்கிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த வாரம் இதற்கான ஒப்புதலை வழங்கி இம்மருத்துவமனை எப்படியெல்லாம் அமைய வேண்டும் என்கின்ற வகையில் தன்னுடைய மேலான ஆலோசனைகளையும் தந்தார்கள். அதனைத் தொடர்ந்து இன்று அம்மருத்துவமனை அமையவிருக்கும் இடத்தினை இத்துறை உயரலுவலர்களுடன் பார்வையிட்டு இருக்கிறோம். ஏறத்தாழ 6.5 ஏக்கர் நிலப்பரப்பில் இம்மருத்துவமனை அமைய உள்ளது. மேலும் தரைத்தளம் மற்றும் 6 தளங்களுடன் கூடிய இக்கட்டிடம் 3,15,290 சதுர அடி பரப்பிலும் மற்றும் செவிலியர் விடுதிகள், முதுநிலை மருத்துவ மாணவர்கள் விடுதிகள் போன்று அனைத்து தரப்பு விடுதிகளையும் சேர்த்து 4,38,718 சதுர அடி பரப்பில் இங்கு இக்கட்டமைப்பு அமைய பெறவிருக்கிறது. இக்கட்டிடம் கட்டுவதற்கு அதிநவீன மருத்துவ உபகரணங்கள் பொறுத்துவதற்கும் ரூ.487.66 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம் சார்பாக நிர்வகிக்கப்படவிருக்கும் இம்மருத்துவமனையின் இடம் தேர்வு செய்யப்படும் பணி முடிவுற்றிருக்கிறது. இன்னும் ஒரு மாதம் காலத்திற்குள் ஒப்பந்தப் புள்ளி கோரும் பணி முடிவடையவிருக்கிறது. ஒப்பந்தங்கள் கோரப்பட்டவுடன் 45 நாட்கள் இடைவெளிக்குப் பிறகு ஒப்பந்தங்கள் பரிசீலினைக்கு ஏற்கப்பட்டு தகுதியுள்ள ஒப்பந்த பணியாளர்களுக்கு பணி ஆணைகள் வழங்கப்படவிருக்கிறது. தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறையின் சார்பில் பணி ஆணைகள் வழங்கப்பட்டவுடன் இம்மருத்துவமனை கட்டிடப் பணிகள் தொடங்கப்படும். ஒப்பந்ததாரர்களுக்கு 2 ஆண்டுகள் என்று கால அவகாசம் வழங்கப்படவிருக்கிறது. 2 ஆண்டுகளுக்கு உள்ளாகவே இப்பணி முடித்து மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பணிகளில் சிறந்த பணியாக முத்திரைப் பதிக்கத்தக்க பணியாக இப்பணி அமையவிருக்கிறது. வரும் செப்டம்பர் மாதத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இப்பணி தொடங்கி வைக்கப்பட உள்ளது.

**இம்மருத்துவமனையில் அமைய உள்ள மருத்துவ வசதிகள்**

மேலும் இம்மருத்துவமனையில் அதிநவீன மருத்துவ வசதிகள் தொடங்கப்பட உள்ளது. இதில் குழந்தைகளுக்கான மருத்துவம், குழந்தைகள் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கான மருத்துவம், அறுவை சிகிச்சை மருத்துவம், குழந்தைகளுக்கான இரைப்பை குடல் மருத்துவம், எலும்பியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், சிறுநீரகவியல் மருத்துவம், நுரையீரல் மருத்துவம், இருதயவியல் மருத்துவம் என்று குழந்தைகளுக்கான பல்வேறு மருத்துவ சேவைகள் வழங்கப்பட உள்ளது. அதையும் கடந்து ஆய்வகங்களில் Biochemistry, Microbiology, Pathology, Imaging suite CT, MRI, USG, Xray போன்ற அதிநவீன மருத்துவ ஆய்வகங்கள் பணியும், அதேபோல் அதிநவீன அதிநவீன சேவைகள் (State of Art Facility) என்கின்ற வகையில் Interventional Radio–logy, Cath Lab, Cath ICU, Dia – lysis Unit, Endoscopy SUITE போன்ற அதிநவீன அமைப்புகளும் இம்மருத்துவமனையில் அமையவிருக்கிறது. அதையும் கடந்து தனித்துவமான சூப்பர் ஸ்பெஷல்டிகள் என்கின்ற வகையில் குழந்தைகள் சிறுநீரியல் (Pediatric Urology), Paediatric HematoOncology, குழந்தைகள் நரம்பியல் அறுவை சிகிச்சை (Paediatric Neuro–surgery), குழந்தைகள் பிளாஸ்டிக் மற்றும் மறுவாழ்வு அறுவை சிகிச்சை பிரிவு (Paediatric Plastic and Reconstructive Unit), குழந்தைகள் உறுப்பு மாற்று பிரிவு (Paediatric Transplant Unit) இம்மருத்துவமனையில் வரவிருக்கிறது.

இம்மருத்துவமனை அமையப் பெற்றவுடன் இந்தியாவிலிருந்து மட்டுமல்லாமல் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் குழந்தைகளை சிகிச்சைக்கு அழைத்து வரும் நிகழ்வுகள் அமையவிருக்கிறது.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண்தம்புராஜ், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் மரு.வினீத், தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழக துணைவேந்தர் மரு.நாராயணசாமி, பதிவாளர் மரு.சிவசங்கீதா, கிங் இன்ஸ்டிட்யூட் இயக்குநர் மரு.இந்துமதி, கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.பார்த்தசாரதி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல குழு தலைவர் கிருஷ்ணமூர்த்தி, செயற்பொறியாளர் கார்த்திகேயன், மாமன்ற உறுப்பினர்கள் வழக்கறிஞர் ஸ்ரீதரன், மோகன் குமார் மற்றும் மருத்துவ அலுவலர்கள், உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### உதவிப் பேராசிரியராக நியமனம் செய்யப்பட்டுள்ள

## திருநங்கை முனைவர் ஜென்சிக்கு வாழ்த்து!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜூன் 24 -

ஆங்கிலத் துறையில் முனைவர் பட்டம் பெற்ற திருநங்கை முனைவர் ஜென்சி அவர்கள் உதவி பேராசிரியராக நியமனம் செய்யப்பட்டுள்ளதையொட்டி, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வாழ்த்தி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



**வாழ்த்துகள் டாக்டர். ஜென்சி!**

**உங்களது உழைப்பின் ஒளியால் இன்னும் பலநூறு பேர் கல்விக்கரை சேரட்டும்!**

**தடைகளையும் புறக்கணிப்புகளையும் கல்வி எனும் பேராற்றலால் வெல்லட்டும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

### முதல்வரின் அறிவுறுத்தல்படி

## ஈரானில் உள்ள தமிழக மீனவர்களை மீட்பதற்கான நடவடிக்கை!

### நெல்லையில் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேட்டி!

*நெல்லை, ஜூன் 24 -*

*ஈரான் போர் பிரச்சினையால் ஈரான் நாட்டின் அருகில் மீன் பிடித் தொழில் செய்யும் திரு நெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த மீனவர்களை தொடர்பு கொள்வது குறித்து சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்களை சந்தித்து மீனவ பிரதிநிதிகள் கோரிக்கை வைத்தனர்.*

*நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (21.6.2025) ஈரான் நாட்டின் அருகில் மீன்பிடித் தொழில் செய்யும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த மீனவர்களை ஈரான் போர் பிரச்சினையால் தொடர்புகொள்ள முடியாததால், அவர்களை தொடர்புக் கொள்வது குறித்து சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு, மாவட்ட ஆட்சியர் மரு. இரா.சுகுமார் ஆகியோரை சந்தித்து மீனவ பிரதிநிதிகள் கோரிக்கை வைத்தனர்.*

*இது தொடர்பாக சட்டமன்றப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.*

*திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பல்வேறு மீனவ கிராமங்களில் இருந்து ஈரான் நாட்டின் அருகிலுள்ள தீவுகளில் மீன்பிடி தொழில் செய்து வருகின்றனர். ஈரான் போர் பிரச்சினையால் அங்கு பணி செய்யும் தமிழக மீனவர்களை தொடர்புகொள்ள முடியாத நிலையில் உள்ளது.*

*உவரி பகுதியைச் சேர்ந்த 36க்கும் மேற்பட்ட மீனவர்கள் ஈரான் நாட்டின் அருகில் இருப்பதாக அவர்களது குடும்பத்தினர் இன்று என்னையும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களையும் சந்தித்து மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும்படி கோரிக்கை வைத்துள்ளனர்.*

*திருநெல்வேலி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருக்கும் பலர் அங்கு இருப்பதால் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, மீனவர்களை மீட்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*கிஸ் தீவில் சிக்கியுள்ளவர்களைச் சந்திக்க அயலக நல வாரியத்தினர் முயற்சி எடுத்து வருகின்றனர். மேலும், இராதாபுரம், திசையன்விளை வட்டாட்சியர்கள் மூலம் ஈரான் கடற்கரை பகுதிகளில் சிக்கி உள்ளவர்கள் குறித்த கணக்கெடுக்கும் பணி நடந்து வருகிறது.*

*முதல்வரின் தனிச்செயலாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் மூலம் ஆன்லைன் மூலம் ஈரானில் இருப்பவர்கள் குறித்த தகவலை பதிவு செய்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. ஈரான் பகுதியில் போர் நடக்கும் இடத்தில் உள்ளவர்கள் சொந்த ஊர் திரும்ப விரும்பினால் அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவியும் செய்து தாயகம் அழைத்து வர முதலமைச்சர் அவர்கள் தயாராக உள்ளார்கள்.*

*இவ்வாறு சட்டபேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.*

*நிகழ்வில், தமிழ்நாடு அரசு அயலக தமிழர் நலவாரிய உறுப்பினர் துபாய் மீரான் மற்றும் மீனவ பிரதிநிதிகள் உடன் இருந்தனர்.*



நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஈரான் நாட்டின் அருகில் மீன்பிடித் தொழில் செய்யும் நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த மீனவர்களை ஈரான் போர் பிரச்சனையால் தொடர்புகொள்ள முடியாததால், அவர்களை தொடர்பு கொள்வது குறித்து சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு,மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் ஆகியோரை சந்தித்து மீனவ பிரதிநிதிகள் கோரிக்கை வைத்தனர்.